**மஸ்கெலியா பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஸ்கெலியா பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மஸ்கெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏக்கர் வரி மற்றும் வீதவரி என்பவற்றிகாக வழங்கப்பட்ட ரூபா 150,833 ஆன கழிவு செலுத்திய வட்டிக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக நன்கொடை மற்றும் உதவிகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதாக 5 ஆம் இலக்க நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த போதும் நன்கொடை மற்றும் உதவிக் கணக்கிற்கு அத்தொகை வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிய தருகிறேன். | நாட்குறிப்பு பதிவு மூலம் மேற் கொள்ளப்படும் சீராக்கம் சரியான கணக்கிற்கு பிரதி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மற்றும் செலவின கணக்குகளை சீராக்கம் செய்யும் போது 02 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவு மூலம் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 90,353,748 ஆக இருந்ததுடன் செலவு வைக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 87,789,330 ஆக இருந்தமையால் | 02 ஆம் இலக்க நாட்குறிப்பில் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு வெவ்வேறாக சீராக்கம் செய்யப்பட்டதாலும், பெறுவனவுகளில் மொத்தப் பெறுமதி மற்றும் கொடுப்பனவுகளின் மொத்த பெறுமதி | அடுத்த ஆண்டின் நிதிக்கூற்றுக் களை தயாரிக்கும் போது இத்தவறுகளை இனங்கண்டு சீராக்கம் செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 2,564,418 ஆன வேறுபாடு காணப்பட்டது. | காசேட்டிற்கு வரவு வைக்கப்பட்டு செலவு வைக்காமல், காசுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பெறுமதி வேறாக சீராக்கம் செய்யப்பட்டதாலும் இவ்வேறுபாடு தென்படுவதாக | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,308,018 ஆக இருந்ததுடன் அதனோடத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,897,062 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2020 ஆம் ஆண்டில் வீதவரி அறவீடு ரூபா 1,743,179 தொகையான நிலுவையில் ரூபா 814,664 அல்லது 47 சதவீதமும் பட்டியலிடப்பட்ட ரூபா 2,832,647 ஆன வருமானத்தில் அறவீடுகள் ரூபா 1,744,973 ஆக இருந்தது. | 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பட்டு வருகின்றது | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| பட்டிலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் வாடகை கட்டணங்களாக பட்டிய லிடப்பட்ட வருமானத்தில் அறவீடு ரூபா 3,210,600 ஆக இருந்தது. | கொவிட் காரணமாக அறவிட முடியாத பணத்தை பதிவழிப்பதற்கு கௌரவ ஆளுனரின் அங்கீகாரத் திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) கேள்வி வாடகை** | | |
| கேள்வி மூலம் குத்தகைக்கு வழங்கும் ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை ஆண்டின் திசெம்பர் | நிலுவை கேள்விப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு ஆரம்ப சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அறவிடுவதற்கு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 31 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,606,750 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| **(ஈ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பெற வேண்டிய ரூபா 1,275,704 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 213,000 ஆன முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பணத்தை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 67 கட்டிட விண்ணப்பங்களில் 2021 நவம்பர் 01 ஆந் திகதி வரையிலும் 50 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தன. காணிச் சிக்கல் காரணமாகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட இதுவரை பெற்றுக்கொள்ள முடியாமையால் 17 விண்ணப்பங்கள் இதுவரை அங்கீகரிக்கப்படவில்லை. | காணிச் சிக்கல் காரணமாகவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிக்கல் காரணமாகவும் 17 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படவில்லை. அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து அறிவூட்டி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | செயற்பாடுகளை வினைத்திறனாக நிறை வேற்றப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கீழ் காணப்படும் வெவ்வேறு கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் காணப்படும் 35 காணிப் பகுதிகளின் உரித்து தற்போது அம்பகமுவ பிரதேச செயலகம், மின்சார சபை மற்றும் வனசீவராசிகள் திணைக்களத்திடம் காணப்படுவதுடன் அவற்றின் சட்டரீதியான உரித்தினை பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பில் மாவட்ட செயலாளர் மற்றும் கௌரவ ஆளுனர் ஆகியோருக்கு அறிக்கையிட்டுள்ளதாக | சட்டரீதியான உரித்தினை உறுதிப்படுத்து வதற்காக சொத்துக்களை கையேற்க வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஸ்கெலிய பிரதேச சபை 2018 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் பிரதேச சபை அதிகாரசபை எல்லைக்குள் வழங்கப்பட வேண்டிய அம்பகமுவ பிரதேச சபையால் வழங்கப்பட்டு தற்போது காலாவதியாகயுள்ள 27 அனுமதிப் பத்திரங்களுக்கும் புதிதாக இனங் காணப்பட்டுள்ள 11 வியாபாரங் களுக்கும் உரிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை மீண்டும் புதுப்பிபதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |